දුරකථන අං./தொலைபேசி இல./Telephone No.

අමාත්‍යතුමා
அமைச்சர்
**Minister**
2784832
2784807
**2785617**

ලේකම්
செயலாளர்
கோட்டை
Secretary
Kotte
2784812

කාර්යාලය
அலுவலகம்
Office
2785141-50
**Fax**: 2784846

ඊමේල්/ஈ – மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
**கல்வி அமைச்சு**
**Ministry of Education**
'ඉසුරුපාය' ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල.
'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura
Battaramulla.
පාසල් කටයුතු ශාඛාව

ඔබේ අංකය
உமது இல.
Your No ..............................

මගේ අංකය
எமது இல.
My No.
ED/01/12/09/03/02

දිනය
திகதி
Date
2016.09. 22

சுற்றறிக்கை இல: 21/2016

அனைத்து மாகாணக் கல்வி செயலாளர்கள்,
அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து அரச மற்றும் அரச சார்பு பாடசாலை அதிபர்கள் கவனத்துக்கு

**பாடசாலை பூமிக்குள் பிரவேசிக்கும் பெற்றோர்களின் ஆடையணிகள் தொடர்பானது**

பெற்றோர்கள் தமது பிள்ளைகளைக் காலை வேளை பாடசாலைகளுக்கு அழைத்துவரும்போதும் மற்றும் பல்வேறு தேவைகளுக்காகப் பாடசாலைக்கு வரும் போதும் அணிந்திருக்க வேண்டிய ஆடைகள் குறித்து பாடசாலைகளினால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமையால் அவர்கள் முகங்கொள்ளும் அசௌகரியங்கள் குறித்து எமது அமைச்சுக்கு விடயங்களை முன்வைத்து, பாடசாலைகளுக்குப் பெற்றோர்கள் வரும்போது அவர்களுக்கு வசதியான வகையில் ஆடை அணிந்து வருவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

இந்த வேண்டுகோள் கருத்திற்கொள்ளப்பட்டு, பிள்ளைகளின் தேவைகளுக்காக பாடசாலைகளுக்குப் பெற்றோர்கள் வரும்போது பாடசாலை மற்றும் பெற்றோர்களின் கௌரவத்தைக் காக்கும் வகையில் முறையாக ஒழுங்கான முறையில் முறையாகவும் ஒழுங்காகவும் ஆடைகளை அணிந்துவருவதற்கும் உரிய கூட்டங்களில் கலந்துகொள்வதற்கும் சந்தர்ப்பம் அளிக்குமாறு அறியத்தருகின்றோம். அது போலவே அவர்களைப் பாடசாலைகளிலிருந்து வெளியேற்றாமலும் பாடசாலைகளுக்கு வரும் பெற்றோர்களின் ஆடையணிகள் தொடர்பாக அவர்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் வண்ணம் பாடசாலை அறிவித்தல் பலகைகளில் பல்வேறுவிதமான அறிவித்தல்களைக் காட்சிப்படுத்துவதையும் தவிர்த்துக்கொள்ளுமாறும் உங்கள் மாகாணத்தின் அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் அறியத்தருமாறு மேலும் அறியத்தருகின்றேன்.

சுனில் ஹெட்டிஆராச்சி
செயலாளர்
கல்வி அமைச்சு